## இனிமையான குழந்தைகளே! மாயாவின் பீடையிலிருந்து (நோய்) தப்புவதற்காக தந்தையின் சரணத்தில் வந்து விடுங்கள். ஈஸ்வரனின் சரணத்தில் வருவதன் மூலம் 21 பிறவிகளுக்கு மாயாவின் பந்தனத்திலிருந்து விடுபட்டு விடுவீர்கள்.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் எந்தப் புருஷார்த்தத்தின் மூலம் கோவில்களில் மூர்த்தியாக வைத்துப் பூஜிக்கத்தக்கவர்களாக ஆகின்றீர்கள்?

பதில்: கோயிலில் வைத்துப் பூஜிக்கத்தக்கவர்களாக ஆவதற்கு பூதங்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான புருஷார்த்தம் செய்யுங்கள். ஒரு போதும் எந்த ஒரு பூதமும் பிரவேசமாகி விடக்கூடாது. யாரிடமாவது பூதத்தைப் பார்த்தால், யாராவது கோபப்பட்டால் அல்லது அவர்கள் மோக வசமாக ஆகிவிட்டால் அவர்களிடமிருந்து விலகி இருங்கள். தூய்மை யாக இருப்பதற்கான உறுதிமொழியைத் தனக்குத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். உண்மை யிலும் உண்மையான ராக்கி கட்டிக் கொள்ளுங்கள்.

பாடல்: உன்னை அழைப்பதற்கு மனம் விரும்புகிறது.....

ஓம் சாந்தி. பக்தர்கள் எப்போதும் பகவானை அழைக்கின்றனர். பகவான் பரமபிதா என்று சொல்லப்படுகின்றார். சொல்கிறார்கள் - ஹே பதீத பாவன் பரமபிதா பரமாத்மா, வந்து குழந்தை களாகிய எங்களைப் தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மை ஆக்குங்கள். ஆக, நிச்சயமாக அனைவருமே தூய்மை இல்லாதவர்களாக ஆகிறார்கள். ஏனெனில் இராவண இராஜ்யம், ஐந்து விகாரங்கள் சர்வவியாபியாக உள்ளன. சத்யுகத்தில் 5 விகாரங்கள் சர்வவியாபி என்பதில்லை. அதுவோ சம்பூர்ண நிர்விகாரி உலகம் எனச்சொல்லப்படுகின்றது. இது சம்பூர்ண விகாரி உலகம். பாரதம் சம்பூர்ண நிர்விகாரியாக இருந்தது- இதை மறந்து விட்டுள்ளனர். கோவில் களுக்குச் சென்று தேவதைகளுடன் தங்களை ஒப்பிட்டுக் கொள்ளவும் செய்கின்றனர். நீங்கள் சர்வகுண சம்பன்னமாக, சம்பூர்ண நிர்விகாரியாக இருக்கிறீர்கள். இங்கே சம்பூர்ண விகாரியாக இருக்கிறார்கள். அதனால் தந்தையை அழைக்கின்றனர். தந்தை வந்து முழு விகாரிகளை தன் பாதுகாப்பில் ஏற்றுக் கொள்கிறார். அடைக்கலம் ஆகி விட்டது அல்லவா. இப்போது அகதிகளாகி விட்டனர், எனவே அழைக்கின்றனர். ஆத்மா அழைக்கின்றது, தந்தையே - பாபா, ஆத்மாக் களாகிய நாங்கள் முற்றிலும் விகாரியாகி விட்டிருக்கிறோம். நீங்கள் வந்து நிர்விகாரியாக ஆக்குங்கள். ஒருவர் மற்றவரைக் கொன்று கொண்டே இருக்கின்றனர். அதனால் இவர்கள் அசுரர்கள் எனப்படுகிறார்கள். பாரதம் தெய்வீக உலகமாக இருந்தது - மனிதர்கள் இதை அறிய மாட்டார்கள். நிச்சயமாக பாரதம் தேவி-தேவதைகளின் பூமியாக இருந்தது. அவர்கள் இராஜ்யம் செய்தனர். ஆனால் அரைக்கல்பமாக மாயா கொஞ்சம் கொஞ்சமாக முற்றிலும் தூய்மை இழக்க வைத்து விட்டது. அதனால் சொல்கின்றனர், தூய்மையற்றவர்களான எங்களுக்கு வந்து அடைக் கலம் கொடுங்கள். இப்போது நீங்கள் வருங்கால தேவி-தேவதைகளாக ஆவதற்காக வந்து பரமபிதா பரமாத்மாவின் மடியைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள்..இது ஈஸ்வரிய காட்ஃபாதர்லி மிஷன் (இயக்கம்). தூய்மை இழந்தவர் களைப்

தூய்மையாக அல்லது முட்களை மலர்களாக மாற்றுகின்ற மிஷன். குழந்தைகளின் தொழிலே பரமபிதா பரமாத்மாவின் வழிமுறையின் படி முட்களை மலர்களாக மாற்றுவது, நரகவாசிகளை சொர்க்கவாசிகளாக மாற்றுவது. ஓ காட்ஃபாதர்! என்று நீங்கள் அழைக்கிறீர்கள் என்றால் அவரை நிச்சயமாக நீங்கள் அறிவீர்கள் இல்லையா? பிறகு பரமாத்மா எங்கே இருக்கிறார்? என்று கேட்க முடியாது. அட, ஆத்மா அழைக்கின்றது, ஓ காட்ஃபாதர் என்று! ஆத்மாக்கள் அழைக்கின்றனர் பரமாத்மாவை. அவரை இந்தக் கண்களால் பார்க்க முடியாது. ஆத்மாவையும் பார்க்க இயலாது. இதுவோ புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் இல்லையா? ஆத்மா ஜோதி சொரூபம். பரமபிதா பரமாத்மா வுக்கும் அதே ரூபம் தான். பாபா சொல்கிறார், ஆத்மாவாகிய நீங்கள் ஒரு சரீரம் விட்டு வேறொரு சரீரம் எடுக்கிறீர்கள். ஆத்மாவாகிய நீங்கள் அழியாதவர்கள், சரீரம் அழியக் கூடியது. ஆத்மா சரீரத்தை விடுகின்றது. சொல்வார்கள், எங்கள் தந்தை இறந்து விட்டார் என்று. ஆனால் ஆத்மா இறப்பதில்லை. ஆத்மாவை அழைக்கின்றனர். இதை நீங்கள் இப்போது புரிந்து கொண்டி ருக்கிறீர்கள். மற்றப்படி முழு உலகத்தின் மனிதர்கள் அனைவருமே பரமாத்மா தந்தை பற்றி முற்றிலும் அறிந்து கொள்ளவில்லை. அதனால் அவர்களுக்குள் எவ்வளவு சண்டையிட்டு அடித்துக் கொள்கின்றனர்! இப்போது ஏவுகணைகளின் மூலம் என்னென்ன செய்யப் போகிறார் களோ தெரியாது. இவர்கள் அசுரர்கள் எனப்படுகிறார்கள். பாபா சொல்கிறார், நான் இதுபோன்ற தொரு சிருஷ்டியைப் படைப்பதில்லை. பாபாவோ சொர்க்கத்தைப் படைக்கிறார். சொர்க்கத்தின் எஜமான் ஆக்குகின்றார். ஆகவே நிச்சயமாக பாபா வரவேண்டும் இல்லையா? குழந்தைகளே, தூய்மையை இழந்து துக்கத்தில் வந்து விட்டவர்களை சதா சுகமானவர்களாக ஆக்குவதற்காக நான் வந்திருக்கிறேன் என்று பாபா கூறுகின்றார். அங்கே (சத்யுகத் தில்) யாரும் பதீதபாவனா வாருங்கள், ஓ காட்ஃபாதர் கருணை காட்டுங்கள், இதுபோல் சொல்ல மாட்டார்கள். இவ்வாறு ஒருபோதும் அழைக்கவும் மாட்டர்கள், ஏனெனில் சுகமாகவே இருக்கிறார்கள். துக்கத்தில் அனைவருமே நினைக்கின்றனர். ஆத்மா தான் நினைவு செய்கின்றது. சரீரத்தோடு இருக்கும் போது சுகம் துக்கம் ஏற்படுகின்றது. சரீரம் இல்லையென்றால் ஆத்மா சுகம் துக்கத்திற்கு அப்பாற்பட்டு இருக்கின்றது. பாபா சொல்கிறார், நான் இவருக்குள் பிரவேசமாகி இவருடைய பெயரை பிரம்மா என வைக்கின்றேன். அநேகர் நன்றாகப்புரிந்து கொள்கின்றனர், பலர் புரிந்து கொள்வதில்லை. ஆகவே புரிய வைக்கப்படுகின்றது - இவர்கள் தூய்மையான உலகிற்குப் போகத்தகுதியானவர்களாக இல்லை, அதனால் ஸ்ரீமத்படி நடப்பதில்லை.இதுவே அசுர இராவண சம்பிரதாயம். இராவணனை ஒவ்வொரு வருடமும் எரிக்கின்றனர் இல்லையா? இது அடையாள மாகும். ஒவ்வொரு வருடமும் ராக்கியும் அணிவிக்கின்றார்கள், ஏனென்றால் பவித்திரமாக இருப்பதில்லை. ராக்கியைக் கட்டுகின்றார்கள், பிறகு தூய்மை இல்லாதவர்களாகி விடுகின்றார் கள். அதனால் வருடா வருடம் ராக்கி கட்டுகின்றார்கள். ராக்கி என்பது தூய்மையின் அடையாள மாகும். விகாரிகளுக்கு ராக்கி அனுப்பி வைக்கின்றார்கள்-நான் தூய்மையாக இருப்பேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறார்கள். தூய்மை ஆவதன் மூலம் 21 பிறவி களுக்கு ராஜ்ய பாக்கியத்தை அடைவார்கள்.

பாபா சொல்கிறார் - நான் தான் வந்து உங்கள் அனைவரையும்

பூஜைக்குரியவர்களாக ஆக்கு கின்றேன். இப்போது நீங்கள் பூஜாரிகளாக இருக்கிறீர்கள். தேவதைகளுக்கும் கல், மண்ணுக் கெல்லாம் பூஜை செய்து அடி வாங்கிக் (ஏமாறிக்) கொண்டே இருக்கிறீர்கள். நான் உங்களைக் கஷ்டங்களில் இருந்து விடுவித்துப் பூஜைக்குரிய லட்சுமி-நாராயணராக ஆக்குகின்றேன். நீங்கள் நரனிலிருந்து நாராயணன் ஆவதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள். அரைக்கல்பமாக மாயா வினால் பீடிக்கப்பட்டிருந்தீர்கள். இப்போது நீங்கள் வந்து பரமபிதா பரமாத்மாவிடம் சரணடைந் திருக்கிறீர்கள். மம்மாவும் சரணடைந்துள்ளார். இந்த பாபாவும் சிவபாபாவிடம் சரணடைந் துள்ளார். அவருக்கோ தம்முடைய சரீரமென்பது கிடையாது. அவருடைய பெயரே சிவன். சிவபாபாவின் பெயர் ஒருபோதும் மாறுவதில்லை. மனித ஆத்மாவின் பெயர் மாறிக்கொண்டே இருக்கின்றது. 84 பெயர்கள் கிடைக்கின்றன. இவ்விஷயங்களை மனிதர்கள் அறிய மாட்டார்கள். 84 பிறவிகள் என்றும் சொல்கின்றனர். ஆனால் 84 பிறவிகள் யார் எடுக்கிறார்கள், இதை யாரும் அறிய மாட்டார்கள். தேவி- தேவதைகளாக இருந்த பாரதவாசிகளே 84 பிறவிகளை எடுக்கிறார் கள். இது எல்லையற்ற டிராமா. இதை மனிதர்கள் தான் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் அறிவீர்கள், காட்ஃபாதர் சொர்க்கத்தைப் படைப்பவர் என்றால் நிச்சயமாக சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்க வேண்டும். பாரதம் சொர்க்கமாக இருந்தது. அந்த ஆஸ்தியைப் பிறகு மாயா இராவணன் அபகரித்துக் கொண்டான். இப்போது மீண்டும் மாயா மீது வெற்றி கொள்ள வேண்டும். மாயாவை வென்றால் உலகை வெல்லலாம். இராவணனிடம் தோல்வி கண்டதால் அசுரர் ஆனீர்கள். இப்போது தேவதை ஆகவேண்டும். முள்ளை மொட்டாகவும், மொட்டைப் பிறகு மலராகவும் ஆக்க வேண்டும். மாயாவின் புயல் வருவதால் மொட்டுகள் அல்லது மலர்கள் வாடிப்போகின்றன. தாய்-தந்தையுடையவர்களாக ஆனப் பிறகு கையை விட்டுச் சென்று விடுகின்றனர். இது புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் இல்லையா? நாள்-தேதியுடன் நிரூபணம் கொடுத்துப் புரியவைக்கப்படுகின்றது - இது மனித சிருஷ்டியின் தலைகீழான மரம், விதை மேலே உள்ளது. அதனால் தான் ஓ, காட்ஃபாதர் எனச் சொல்லி நினைவு செய்கின்றனர் இல்லையா? இந்த ஞானம் மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், அனைத்து ஆத்மாக்களின் தந்தையாக உள்ளவரையே நினைவு செய்கின்றனர். நாம் சகோதரர்கள் - அனைவருக்கும் தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்க வேண்டும். அது சகோதரத்துவம் எனப்படுகின்றது. நீங்கள் சகோதர-சகோதரர்கள், ஆஸ்தி தந்தையிடமிருந்து கிடைக்க வேண்டும். அனைவருக்கும் சுகம்-சாந்தியின் ஆஸ்தியைத் தருகின்றார். தந்தை வந்து ஆசிரியர் ரூபத்தில் கற்பிக்கின்றார். பிறகு சத்குரு ஆகி உடன் அழைத்துச் செல்கின்றார். சத்யமானவர் என்று ஒரே இறைவனாகிய தந்தை மட்டுமே சொல்லப் படுகின்றார். அவருடைய சத்சங்கம் இது. சத்யமான சங்கம் அக்கரைச் சேர்க்கும். இப்போது வினாசம் ஏற்படப் போகின்றது. அனைவரும் சாந்திதாம், சுகதாம் செல்ல வேண்டும். எனது படகை அக்கரை கொண்டு சேருங்கள், நாங்கள் விஷக்கடலில் மூழ்கியிருக்கிறோம் என்கிறார்கள். ஆகவே தந்தை இங்கே வரவேண்டியுள்ளது - சாந்திதாம்-சுகதாம் அழைத்துச் செல்வதற்காக. அரைக் கல்பம் சுகதர்மம், அரைக்கல்பம் துக்க தர்மம். இந்த பாரதம் முற்றிலும் பதீத், போகியாக ஆகிவிட்டுள்ளது. யோகி என்று சொல்ல மாட்டார்கள். சத்யுகம்-திரேதாயுகம் யோகேஸ்வரின் இராஜ்யம் எனப்படுகின்றது. கிருஷ்ணரை யோகேஸ்வர் என்கிறார்கள். ஈஸ்வரனிடம்

யோகம் வைத்துப் பதவி பெறவேண்டும். அதை நீங்கள் அடைந்துக் கொண்டிருக் கிறீர்கள். தந்தை எவ்வளவு நன்றாகப் புரியவைக்கின்றார்! புரியவைப்பவர் ஞானக்கடல். மனிதர்கள் ஞானக் கடலாக இருப்பதில்லை. இவர் (பிரம்மா பாபா) தம்மை ஞானக்கடல் எனச் சொல்லிக் கொள்வதில்லை. நீங்கள் இப்போது மாஸ்டர் ஞானக்கடல் ஆகிக் கொண்டிருக் கிறீர்கள். ஞானக்கடலிடமிருந்து ஞானம் முழுவதையும் உட்கொண்டு (கிரகித்து) விடுகிறீர்கள். எப்படி ஆசிரியர் மூலம் மாணவர்கள் வக்கீலுக்கான ஞானத்தை மனதில் வாங்கிக் கொள்கின்றனர், பிறகு வக்கீல் ஆகிவிடுகின்றனர். நீங்கள் ஞானக்கடல் முழுவதையும் விழுங்கிக் கொள்கின்றீர்கள். முழு ஞானமும் வந்துவிட்ட பின் நீங்கள் பிராலப்தம் (பலன்) அடைவீர்கள். தந்தை நிர்வாண்தாம் சென்று விடுவார். குழந்தைகளாகிய நீங்கள் நம்பர்வார் புருஷார்த்தத்தின் படி ஆஸ்தியை அடைகிறீர்கள். இந்த ஞானத்தினால் நீங்கள் மீண்டும் அதே தேவி-தேவதையாக, சதா சுகமானவர்களாக ஆகிவிடுகின்றீர்கள்.இப்போது நீங்கள் ஈஸ்வரனிடம் அடைக்கலமாக வந்திருக்கிறீர்கள். பாபா உங்களை 21 பிறவிகளுக்கு மாயாவின் பந்தனத் திலிருந்து விடுவிக் கிறார். பாபா எவ்வளவு எளிதாகப் புரியும்படி சொல்லித்தருகின்றார்! பாரஸ் புத்தியுள்ளவர்களாக ஆகக்கூடியவர்களே அவ்வாறே ஆவார்கள்.

நாம் பாபாவிடமிருந்து கல்ப-கல்பமாக ஆஸ்தி பெறுகின்றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். மாயா அபகரித்துக் கொள்கின்றது, பிறகு நான் வந்து உங்களுக்கு சுகம்- சாந்தியின் ஆஸ்தியைத் தருகின்றேன். இராவணன் துக்கத்தின் ஆஸ்தியைத் தருகின்றான்.இராம் சுகத்தின் ஆஸ்தியைத் தருகின்றார். எத்தனை ஜென்மங்கள், எவ்வளவு காலம் துக்கம் மற்றும் சுகத்தின் ஆஸ்தி கிடைக்கின்றது - அதையெல்லாம் கூட உங்களுக்குச் சொல் கின்றார். தந்தை சொல்கின்றார் - தந்தையாகிய என்னை மட்டும் நினைவு செய்யுங்கள், போதும். நான் ஆத்மா, பரமபிதா பரமாத்மாவின் குழந்தை அவ்வளவுதான். தந்தையை நினைவு செய்து கொண்டே இருங்கள், போதும். உங்களுடைய விகர்மங்கள் வினாசமாகி விடும். நீங்கள் விகர்மாஜீத் ராஜா ஆகிவிடு வீர்கள். விகர்மாஜீத் ராஜாவின் சகாப்தம் ஒன்றிலிருந்து தொடங்கியது, பிறகு விகர்ம சகாப்தம் 2500 ஆண்டுகளுக்குப் பின் ஆரம்பமாகின்றது. விகர்மாஜீத் மற்றும் விக்ரம் (விகாரம்) பாரதவாசி களின் இரண்டு சகாப்தங்கள். விகர்மத்தின் சகாப்தத்தை அனைவரும் அறிவார்கள். விகர்மாஜீத் சகாப்தத்தை மறந்து விட்டிருக்கிறார்கள். இது படிப்பு.

பாருங்கள், முரளியும் கூட எவ்வளவு யாத்திரை செய்கிறது! இல்லையென்றால் கோப-கோபியருக்கு முரளி எப்படிப் போய்ச் சேர்வது? டேப்புகளும் (பதிவு செய்த ஒளி நாடா) செல்கின்றன. எல்லா சென்டர்களிலும் டேப் போட்டுக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த முரளி அற்புதமானது. கோபியர்கள் தவித்துக் கொண்டிருந்தார்கள் என்று இதற்குத் தான் மகிமை சொல்லப்படுகின்றது. பாபா சொல்கிறார், நானோ தூய்மையற்ற உலகிலேயே வருகின்றேன். சத்யுகத்தில் தேவதைகளுக்கு அளவற்ற சுகம்! இவ்வளவு சுகத்தை யாரும் பெற முடியாது. வைர வைடூரியங்களால் ஆன மாளிகைகளில் வசிக்கின்றனர். இங்கோ தங்கம் எவ்வளவு விலை உயர்ந்ததாக உள்ளது! அங்கோ நீங்கள் தங்கத்தின் செங்கற்களால் மாளிகை கட்டுவீர்கள். பிறகு அதில் வைரங்கள் பதிக்கப்படும். தந்தை குழந்தைகளை எதிலிருந்து என்னவாக ஆக்கிவிடுகின்றார்! தூய்மையாக இருப்பதற்கான உறுதிமொழி மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். கோபம்

என்ற பூதம் இருக்கக் கூடாது. இவரிடம் பூதம் பிரவேசமாகி யுள்ளது, இவரிடமிருந்து விலகியிருங்கள் என்பது புரியவைக்கப்படுகின்றது. அநேகர் உள்ளனர், இன்னும் கூட மோகம் அவர்களை விட்டுப் போகவில்லை. எப்படிப் பெண் குரங்குக்கு (குட்டியின் மீது) மோகம் உள்ளது இல்லையா? அதுபோல் குழந்தைகள் முதலானோர் மீது மோகம் ஒட்டிக் கொள்கின்றது. குரங்குகளிடம் மற்ற அனைத்தையும் விட அதிகமாக விகாரங் கள் உள்ளன. உங்களை இப்போது குரங்கிலிருந்து கோவிலுக்குத் தகுதியானவர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார்.

இரக்ஷா பந்தன் பற்றிய ரகசியமும் சொல்லிப் புரியவைக்கப்பட்டுள்ளது. ராக்கி கட்டு வதற்கான விஷயம் மட்டும் இல்லை. இது தந்தையிடம் உறுதிமொழி அளிப்பதாகும். இனிமையான பாபா, எல்லை யற்ற பாபா, அரைக்கல்பமாக பக்தர்கள் நாங்கள் உங்களை நினைவு செய்திருக்கிறோம். இப்போது நீங்கள் வந்திருக்கிறீர்கள், வைகுண்டத்தின் எஜமான் ஆக்குவதற்காக. அதனால் நாங்கள் உங்களுக்கு உதவியாளர் ஆகின்றோம். நாங்கள் வாக்குறுதி அளிக்கின்றோம் - ஒருபோதும் தூய்மை இழக்க மாட்டோம். தூய்மையாகி பாரதத்தைப் தூய்மை யானதாக ஆக்குவோம். எவ்வளவு சுலபமான வி^யம்! நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஸ்ரீமத் படி தூய்மையற்ற மனிதர்களைப் தூய்மை ஆக்குவதற்கான சேவை செய்ய வேண்டும்.தந்தைக்கு முழுமையான உதவியாளராக ஆக வேண்டும்.

2. ஞானக்கடலின் முழு ஞானத்தையும் கிரகித்துக் கொள்ள வேண்டும். பாபாவின் நினைவின் மூலம் விகர்மங்களை எரித்துச் சாம்பலாக்கி விகர்மாஜீத் ஆகவேண்டும்.

வரதானம் : எந்தவொரு கடமையையும் ஏற்று நடத்தும் பொழுதும் சுயம் தங்களை சேவாதாரி என்று புரிந்து சேவை செய்யக் கூடிய இரட்டிப்பு (டபிள்) பலனின் அதிகாரி ஆவீர்களாக.

எந்தவொரு காரியம் செய்கையிலும், அலுவலகம் செல்லும் பொழுதும் அல்லது தொழில் (பிஸினெஸ்) செய்யும் பொழுதும், சேவைக்காக இந்த (ட்யூட்டி) கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம், சேவையின் பொருட்டு இதை செய்து கொண்டிருக்கிறேன் என்பது எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும். அப்பொழுது சேவை இயல்பாகவே உங்களிடம் வரும். மேலும் எந்த அளவு சேவை செய்வீர்களோ, அந்த அளவு குஷி அதிகரித்துக் கொண்டே போகும். வருங்காலத்திற்கோ சேமிப்பு அவசியம் ஏற்படும் தான். ஆனால் கண்கூடான பலன் குஷி கிடைக்கும். எனவே (டபிள்) இரட்டிப்பு பலனுக்கு அதிகாரி ஆகி விடுவீர்கள். நினைவு மற்றும் சேவையில் (பிஸி) மும்முரமாக இருந்தீர்கள் என்றால் எப்பொழுதுமே (பலன்) பழத்தை சாப்பிட்டுக் கொண்டே இருப்பீர்கள்.

சுலோகன்: யார் எப்பொழுதும் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கிறார்களோ, அவர்கள் சுயம் தங்களுக்கும் அனைவருக்கும் பிரியமானவர்களாக படுவார்கள்.